# கொஸ்லந்த மீரியபெத்த மண்சரிவு குடும்பக் கட்டமைப்புகளில் ஏற்படுத்திய தாக்கங்கள்சமூகவியல் ஆய்வு

[1] டயசியா புவிரா[2] ரூபிச்சமுத்து ஜோான்சன்
[1&2]சமூக விஞ்ஞானங்கள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]dayasiyapuviraj@gmail.com_[2] vpjohnsan90@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**: இலங்கையின் மத்திய மலைநாட்டின் ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள மீரியபெத்த தோட்டத்தில் 2014இல் ஏற்பட்ட மண்சரிவானது மக்களிடையே உயிரிழப்புக்கள், உடல், உளப் பாதிப்புக்கள், சொத்தழிவு, சமூக்கட்டமைப்பு மற்றும் சமூக நிறுவனங்களில் மாற்றங்கள்,சூழலியல் மாற்றங்கள் என பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியது. மலைநாட்டில் மண்சரிவு அனர்த்தங்கள் வழமையாக அமைந்தாலும் மீரியபெத்த தோட்ட மண்சரிவு வரலாற்றில் பதியுமளவு முக்கியம் பெற்ற இயற்கை அனர்த்தமாகக் காணப்படுகின்றது. ஏனெனில் பல மக்களின் உயிரிழப்புகளுக்கு இவ்வனர்த்தமே காரணமாக அமைந்துது. அனர்த்தத்திற்கு பின் மீள் கட்டுமான, மீள் நிர்மாணப் பணிகள் அரசாங்கத்தினாலும், தனியார் நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயினும் இந்த ஆய்வானது மீரியபெத்த தோட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவு சமூகக்கட்டமைப்பில் உள்ளடங்கும் குடும்பக் கட்டமைப்பில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதை விரிவாக விளக்குவதாக அமைந்துள்ளது. அத்தோடு மீரியபெத்த மக்கள் அனர்த்தம் இடம்பெற்று இரண்டு வருடம் ஆகிய நிலையிலும் சரியான மீள்கட்டுமானமின்றி உறவினர் வீடுகளிலும். வசதி வாய்ப்பற்ற வீடுகளிலும், தற்காலிக குடியிருப்புகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இதனால் குடும்ப ரீதியாக பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங் கொடுக்கின்றனர். இவ்வாய்வானது குடும்பக் கட்டமைப்பானது எவ்வாறு மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை எண்ணக்கரு சார்ந்து பகுப்பாய்வு செய்கின்றது. அத்தோடு எண் ரீதியான, தர ரீதியான மற்றும் இரண்டும் இணைந்த முறையியல்கள் பயன்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 55 குடும்பங்களை மாதிரிகளாகக் கொண்டு பேட்டிமுறை, அவதானம் மற்றும் வினாக்கொத்து மூலமாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உறவுமுறைச் சிக்கல், பாதுகாப்பற்ற தன்மை, போதிய வருமானமின்மை, பிள்ளைகள் சமூகமயமாதலில் தடங்கல், போதிய உட்கட்டமைப்பு வசதிகளற்ற வீடுகள் அமைத்துக் கொடுத்தல், சமூக பொருளாதாரப் பிரச்சினைகள், கல்விசார் பிரச்சினைகள், பாலியல்சார் பிரச்சினைகள், உளம்சார் பிரச்சினைகள், ஒழுக்கம் மற்றும் பண்பாடுசார் பிரச்சினைகள் என பல பாதிப்புக்களை குடும்பம் சார்ந்து மக்கள் எதிர்நோக்குகின்றனர் என்பதை வரிவாக விளக்குவதாக அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்**: மீரியபெத்த, மண்சரிவு, குடும்பம்

## ஆய்வு அறிமுகம்

பூகோள ரீதியில் அண்மைக்காலமாக இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமாக இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்து வருகின்றன. இந்தவகையிலே கடந்த வருடம் (2014/10/29) இலங்கையின் மத்திய மலைநாட்டின் ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தின் அல்தமுல்லை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கொஸ்லாந்தை மீரியபெத்த தோட்டத்தில் காலை 7 மணி 40 நிமிடம் அளவில் மண்சரிவு என்ற இயற்கை அனர்த்தம் ஏற்பட்டது. மீரியபெத்த தோட்டத்தின் ஒரு பகுதியில் ஏற்பட்ட மண்சரிவால் 37 பேர் மண்ணில் புதையுண்டு பலியான அதேவேளை 88 குடும்பங்களைச் சேர்ந்த 321 பேர் நேரடியாக வீடுகளையும், சொத்துக்களையும் இழந்து அகதிகளாகினர்(மண்சரிவு அனர்த்தம் பற்றிய அறிக்கை, 2014, அல்தமுல்லை பிரதேச செயலகம்).

இவ் ஆய்வு அனர்த்தம் இடம்பெற்று ஒருவருடம் முடிந்து முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் பூனாகலை மாகந்த தேயிலை தொழிற்சாலையில் 55 அறைகளுடன் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக முகாமிலே தங்கவைக்கப்பட்டுள்ளனர். அடிப்படை வசதிகளைக்கூட சிரமத்துடன் நிறைவேற்றிக்கொள்ளும் நிலையில் அம்மக்களின் சமூக நிறுவனங்களான குடும்பம், திருமணம், கல்வி, பொருளாதாரம், சமயம் ஆகியன பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் கலாசார உட்கூறுகளான நெறிமுறைகள், விழுமியங்கள், வழக்காறுகள் போன்ற அம்சங்களும் சமூக நடத்தையில் செல்வாக்குச் செலுத்த முடியாத நிலையில் உள்ளன. இதனால் அங்கு மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை நடாத்துவதற்கு பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். எனினும் இவ்வாய்வில் குடும்பத்தில் மீரியபெத்த மண்சரிவு ஏற்படுத்திய தாக்கங்கள் என்பது கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

அனர்த்தம் இடம்பெற்ற போது அரசு சார்ந்த, அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற பல்வேறு சமூக சேவைகள் அமைப்புக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்க முன்வந்த

போதிலும் ஒரு வருடம் கடந்து செல்லும் நிலையில் ஆய்வு பிரதேச மக்களின் சமூக கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இன்றுவரை இடம்பெறாது இருக்கின்றது. எனவேதான் இவ்வாய்வானது மண்சரிவினால் எவ்வாறு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை அடையாளப்படுத்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 1.1 ஆய்வுப் பிரச்சினைகள்

சமூகக் கட்டமைப்பிலுள்ள கூறுகள் ஒவ்வொன்றும் சமூகத்தின் சீரான இயக்கத்தின் பொருட்டு செயற்பாடுகளைக் கொண்டுள்ளன. இத்தகைய செயற்பாடுகளால் சமூகத்தில் சீரான கட்டமைப்பு என்பது பேணப்படுகின்றது. இவ்வகையில் இந்த இயற்கை அனர்த்தமானது குடும்பக் கட்டமைப்புகளில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இது இன்றைய சமூகப் பிரச்சினையாக அடையாளங்காணப்பட்டுள்ளது.

## 2. ஆய்வு முறைமையியல்.

சமூக ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கு ஆய்வு முறைமையியல் என்பது இன்றியமையாததாகும். இவ்வாய்வு எண் ரீதியான (Quantitative) மற்றும் பண்புரீதியான (Qualitative) என்ற இரண்டும் இணைந்த முறைமையியல்களைக் கொண்டு ஆய்வுசெய்யப்படுகின்றது. இவ் ஆய்வில் முதலாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ள வினாகொத்து, நேர்காணல், குழுக் கலந்துரையாடல், உற்றுநோக்கல், பங்குபற்றி அவதானித்தல் என்பன பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் நிலைத் தரவுகள் மீரியபெத்த மண்சரிவு பற்றிய பிரதேச செயலகப் புள்ளிவிபரவியல் அறிக்கை, கிராம சேவகர் புள்ளிவிபரத் திரட்டு, தோட்ட நலன்புரி உத்தியோகத்தர் தகவல் திரட்டு, பத்திரிகைகள், இணையத்தளங்கள், நூல்கள் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

மீரியபெத்த தோட்டத்தில் மண்சரிவால் நேரடியான பாதிக்கப்பட்டு தற்போது கொஸ்லாந்தை மாகந்த தோட்டத்தின் தொழிற்சாலையில் தற்காலிகமாக முகாம் அமைத்து குடியமர்த்தப்பட்டுள்ள 55 அறைகளில் வாழ்கின்ற குடும்பங்களை முழுதளாவிய மாதிரியாக கொள்ளப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.முகாமில் 86 குடும்பங்களைச் சேர்ந்த 321 பேர் வாழ்கின்றனர். சில அறைகளில் இரண்டு குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சிறிய இடத்திற்குள் இரண்டு குடும்பங்கள் வாழமுடியாது என்றதால் சிலர் எந்நேரமும் முகாமில் இருப்பதில்லை. நிவாரண உதவிகள் மற்றும் ஏனைய சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அறைக்கு ஒருவரேனும் இருப்பதனால் 55 அறைகளை திட்டமிடப்பட்ட எழுமாற்று மாதிரியைக் கொண்டு வினாகொத்தின் மூலம் தரவுகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

***2.1 மாதிரி தெரிவு செய்யப்பட்டோர் விபரம்***

| மொத்தக் குடும்பங்கள்(T) | மாதிரியாக தெரிவுசெய்யப்படும் குடும்பங்கள் (S) | மாதிரி வீதம் $\frac{S}{T} \times 100$ |
|---|---|---|
| 86 | 55 | 63 % |

மூலம்:- இரண்டாம் நிலைத் தரவு.

**3. தரவுப் பகுப்பாய்வும், கலந்துரையாடலும்.**

**3.1 மீரியபெத்த தோட்ட மக்களின் குடும்பக் கட்டமைப்பில் மண்சரிவு ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்.**

மீரியபெத்த தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தம் மீரியபெத்த தோட்டத்தின் முழு சமூக கட்டமைப்பையும் பாதித்துள்ளது. மக்களது தேவைகளை நிறைவு செய்யும் சமூக மற்றும் பண்பாட்டுக் கூறுகளின் உள்ளார்ந்த, மற்றும் வெளிப்படையான செயற்பாடுகள் அத்தனையும் மண்சரிவு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. எல்லாச் சமூகங்களைப் போன்றும் மீரியபெத்த சமூக கட்டமைப்பின் கூறுகள் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டு செயற்படும் தன்மையினைக் கொண்டிருப்பதனால் ஒன்றில் ஏற்பட்ட பாதிப்பு மற்றதிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக மண்சரிவால் உயிர்களையும், முற்று முழுதான சொத்துக்களையும், காலம் காலமாக தங்களுக்கான தனித்துவமாக பேணி பாதுகாத்து வந்த பண்பாட்டு அம்சங்கள் போன்றன மண்ணுக்குள் புதையுண்டமை சமூக கூறுகளில் உடைவை ஏற்படுத்தியுள்ளன. 578.36 ெ`க்டெயர் என்ற இத்தோட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் ஒரு கிலோமீட்டர் சதுரஅடி ($km^2$) பரப்பினையுடையநிலம் முற்று முழுதாக மண்ணுக்குள் புதைந்துள்ளதோடு மண்சரிவு அனர்த்தத்திற்கு முன் இதே இடத்தில் மக்கள் வாழ்ந்தமைக்கான எந்தவொரு அடையாளமும் இன்று இல்லாமல் போயுள்ளது. இதனால் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களும் அப்பிரதேசத்தில் மேலும் மண்சரியலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ள பகுதியைச் சேர்ந்த ஏனைய மக்களும் இடம்பெயர்ந்து அயல் பிரதேசங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

*விமான ஒளிப்படத்தில் மீரியபெத்த தோட்டம்*

*மண்சரிவிற்கு முன் மீரியபெத்த தோட்டம்*






மூலம்:- இணையத்தளம்.

இதுவரை காலமும் சமூக கட்டமைப்பை சீராக பேணிவந்த குடும்பம், திருமணம், கல்வி, அரசியல், பொருளாதாரம், சமயம் போன்ற சமூக நிறுவனங்கள் அனைத்தும் மண்சரிவு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டதோடு, இவற்றுடன் இணைந்து சமூகக் கட்டமைப்பின் சீரான செயற்பாட்டை அர்த்தப்படுத்தும் விழுமியம், நெறிமுறைகள், வழக்காறுகள், சமூகச் சட்டங்கள் போன்றனவும் மண்ணோடு மண்ணாகிப் போய்விட்டன. இவ்வாய்வில் சமூக கட்டமைப்பின் கூறுகள் சமூக நிறுவனம் என்ற ரீதியிலும், பண்பாட்டுக் கூறுகள் என்ற ரீதியிலும் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்பதை இனங்காண்பதாக அமைகின்றது.

எல்லாச் சமூகங்களையும் போலவே குடும்பங்கள் மீரியபெத்த தோட்டத்திலும் அடிப்படை ஆக்கக் கூறாக அமைந்துள்ளது. மண்சரிவு அனர்த்தம் இத்தோட்டத்தின் குடும்பம் என்ற சமூக நிறுவனத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மண்சரிவானது மக்களின் குடும்பக் கட்டமைப்பு மட்டுமன்றி சமூகக் கட்டமைப்பிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதை ஆய்வின் மூலம் கண்டறிய முடிந்தது.

மீரியபெத்த தோட்டத்தின் 164 மொத்த குடும்பங்களில் 86 குடும்பங்கள் வீடுகளையும், சொத்துக்களையும் முற்றாக இழந்துள்ளனர். இது இத்தோட்டத்தின் மொத்த குடும்பங்களில் 52 வீதமாகும். இதில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் உயிரிழந்தமை குடும்ப கட்டமைப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது

இருப்பிடங்கள் முற்றாக மண்ணுக்குள் புதைந்துள்ளமையால் தனித்தனியாக வாழ்ந்த குடும்பங்கள் சில உறவுமுறைக் குடும்பங்களுடன் இணைந்து கூட்டாக வாழும் அதேவேளை ஏற்கனவே கூட்டுக்குடும்பமாக வாழ்ந்த குடும்பத்தினர் நிவாரணம் மற்றும் புதிய வீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக தனிக் குடும்பங்களாகவும் பதிவுசெய்துகொண்டுள்ளனர் என்பதை ஹல்தமுல்லை பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளரை நேர்காணும் போது அறிந்துகொள்ளமுடிந்தது.

மேலும் மீரியபெத்த தோட்டத்தின் சமூகக் கட்டமைப்பினைப் பேணும் குடும்பங்கள் முன்னர் ஆற்றிய செயற்பாடுகளினை முன்னெடுத்துச் செல்வதில்லை. குறிப்பாக இன்று தற்காலிமான குடியிருப்புக்களில் வாழும் குடும்பங்கள் பாலியல் தேவையை பூர்த்தி செய்யும் நிலையில் இல்லை. இம் மக்கள் தற்போது 10 சதுரஅடி அகலத்தையும், அதே அளவு நீளத்தையும் உடைய மிகச் சிறிய இடத்துக்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 7-10 பேர் வரை தங்கவைக்கப்பட்டுள்ளனர். குழந்தை வளர்ப்புச் செயற்பாடும் மிக சிரமத்திற்கு மத்தியில் இடம்பெறுகின்றது.

நேரடி அவதானிப்பின் மூலம் இதனைக் கண்டறிய முடிந்ததோடு **''மண்சரிவிற்குப் பின்னர் உங்கள் பிள்ளைகளை பராமரிக்கும் நிலை: சிறப்பானதா, முன்புபோன்றதா, சிரமமானதா''** என்று 55 அறைகளை அடிப்படையாகக்கொண்டு வினாகொத்தின் மூலம் கேட்டபோது இரண்டு வீதமானோர் சிறப்பானது என்றும் முன்பு போன்றுள்ளது என்றும் தெரிவித்தனர். எனினும் 98 வீதமானோர் சிரமமாக உள்ளது என்றே கூறியுள்ளனர்.இதனை பின்வரும் வரைபடம் 3.2இன் மூலம் அறியலாம்.

***வரைபடம் 3.2 பிள்ளைகளைப் பராமரித்தல் பற்றிய நிலை***




மூலம் :- கள ஆய்வுத்தரவு

சிறப்பாகவும், முன்பு போன்றுள்ளது என்றும் கூறிய பெற்றோர்களின் பிள்ளைகள் யாரும் முகாமில் இல்லாது, பாதுகாவலர்களிடமும், உறவினர்களிடமும் வாழ்ந்து வருகின்றமையினால் அவ்வாறான மனநிலையை கொண்டிருந்தனர் என்பதை கலந்துரையாடலின் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது

***அட்டவணை 3.1 1-20 வயதிற்கு உட்பட்டவர்கள் பற்றிய விபரம்***

| வயது | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 கும் குறைவு | 2 | 5 | 7 |
| 1- 5 | 13 | 19 | 32 |
| 6- 10 | 17 | 11 | 27 |
| 11- 20 | 14 | 15 | 29 |


மூலம்:- பிரதேச செயலக அறிக்கை, ஹல்தமுல்லை, 2016

நிரந்தர இருப்பிடம் கிடைக்காத தன்மை, அகதி வாழ்வு என்பன குடும்பங்கள் தமது குழந்தைகளை சமூகமயமாக்குவதில் தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக தங்களது குடும்பத்தில் முறையாக பேசும் போதும், பிள்ளைகள் அயலவர்கள் பேசும் முறையற்ற வார்த்தை பிரயோகங்களை தாங்களும் பிரயோகிப்பதாகவும் அதனை கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் சில பெற்றோர்கள் தெரிவித்தனர். மிகச் சிறிய அறைக்குள் இரண்டு அல்லது மூன்று பேருக்கு மேல் வாழ முடியாது என்ற நிலை இருப்பதால் சில குடும்ப அங்கத்தவர்கள் வெளி இடங்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்து வாழ்கின்றனர். இதனால் குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான இடைவினை, சமூகமயமாக்கம் என்பன குறைவாகவுள்ளது.

**மண்சரிவிற்குப்பின்னர் உங்கள் குடும்ப வருமானம் எவ்வாறுள்ளது** என்று வினாகொத்தின் மூலம் கேட்ட போது 6 வீதமானோர் அதிகரித்துள்ளது என்றும் 11 வீதமானோர் முன்புபோன்றுள்ளது என்றும் 83 வீதமானோர் குறைவடைந்துள்ளது என்றும் கூறியுள்ளனர். குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு புதிய வீடு வழங்கப்படும் வரை என 700 ரூபாவிலிருந்து 1500 ரூபா வரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் மூலம் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமைகளில் கொடுப்பனவுகள் (கூப்பன்) வழங்கப்படுகின்றன.

இதனால் மண்சரிவு அனர்த்தத்திற்கு முன் தோட்டத் தொழிலில் இருந்தவர்களும் வேலையற்று இருந்தவர்கள், மாதம் 2000 ரூபாவை விட குறைந்த வருமானத்தைப் பெற்றவர்கள் மற்றும் குறைவான குடும்ப அங்கத்தவர்களை கொண்டவர்களே தங்களது வருமானம் அதிகரித்துள்ளது என்றும் முன்பு போன்றுள்ளது என்றும் கூறியுள்ளனர். இன்னும் 60 வயதிற்கு மேற்பட்ட 40 பேருக்கு மாதம் 250 ரூபா பின்படி என்ற அரசாங்க கொடுப்பனவும் வழங்கப்படுகின்றதுமே வருமானம் குறைவில்லை என்று வெளிப்படுத்த காரணமாகும். மண்சரிவிற்கு முன் தச்சுதொழில், விவசாயம், மாடுவளர்ப்பு, ஆடுவளர்ப்பு, வியாபாரம் போன்ற தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் முன்னரை விட தற்போது குறைந்த வருமானத்தைப் பெரும்நிலையிலுள்ளனர் என்பதும் ஆய்வின் மூலம் அறியமுடிந்தது.

*வரைபடம் 3.4 கூப்பன் பெறும் குடும்பங்கள் பற்றிய விபரம்.*




மூலம்:- பிரதேச செயலகம், ஹல்தமுல்லை, 2016

இவ்வாறு மீரியபெத்த தோட்டத்தின் குடும்பக் கட்டமைப்பில் மண்சரிவு அனர்த்தமானது பாரிய தாக்கங்கள் பலவற்றை தோற்றுவித்துள்ளது. மண்சரிவிற்கு முன்னர் காணப்பட்ட குடும்பக் கட்டமைப்பிற்கும், மண்சரிவிற்குப் பின்னர் காணப்படும் குடும்பக் கட்டமைப்பிற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் நிலவுவதை ஆய்வின் மூலமாகக் கண்டறிய முடிந்தது. எனினும் மக்கள் அன்றாட நிவாரணம் என்பதற்கும் அப்பால் சென்று கல்வி சார்ந்த நிவாரணங்களையும், கல்வியுடன் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்களையும் அதிகம் விரும்புகின்றனர் என்பதையும் ஆய்வின் மூலமாக கண்டறிய

முடிந்தது. எவ்வாறிருப்பினும் இன்று வரை மண்சரிவு ஏற்படுத்திய விளைவுகளிலிருந்து மக்கள் மீள முடியாது இருப்பதையும் ஆய்வின் மூலமாக கண்டறிந்து கொள்ள முடிந்தது.

**4. முடிவுரை**

மீரியபெத்த சமூக கட்டமைப்பில் மண்சரிவு ஏற்படுத்திய பாதிப்பு அம்மக்களுக்கு எதிர்காலம் பற்றிய பயத்தை ஏற்படுத்தியுள்ளது. மீரியபெத்த மக்களுக்கு மற்றுமன்றி ஒட்டுமொத்த மலையக சமூகத்திற்கே ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தம் பெரும்பயத்தை ஏற்படுத்தியுள்ளதை அறியமுடிகின்றது. இந்த அனர்த்தம் பௌதீக காரணிகளால் ஏற்பட்டாலும் இதிலிருந்து மனித உயிர்களையும், சொத்துக்கள் சேதங்களையும் குறைக்க மனிதக் காரணிகளே தடையாக இருந்துள்ளன. அதே போன்று இச்சமூக கட்டமைப்பை மீள கட்டமைக்க முடியாமைக்கும் மனித சமூகமே காரணமாக இருந்து வருவதை இவ்வாய்வின்போது தெளிவாக இனங்காண முடிந்தது. எனவே குடும்பம் மற்றும் சமூக கட்டமைப்பினை மீள் கட்டமைப்பதில் தனியொரு அமைப்பு அல்லது நிறுவனம் மட்டும் எந்தவொரு செயற்பாட்டையும் முழுமை பெறச் செய்வது சாத்தியம் இல்லை. சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும். அந்தவகையில் அரசாங்கம், அரசியல் கட்சிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மீரியபெத்த சமூக உறுப்பினர்கள், அங்குள்ள குடும்பங்கள், பாடசாலை ஆசிரியர் சமூகம், தோட்ட கம்பனிகள் போன்றன சிறப்பாக செயற்படுவதன் மூலம் சிறப்பான எதிர்காலத்தை அம்மக்களுக்கு அமைத்துக் கொடுக்க முடியும்.

**5. உசாத்துணை நூல்கள்**


1. அந்தனிஜீவா, 1995,*மலையகமும் இலக்கியமும்*, மலையக வெளியீட்டகம்.
2. அய்யூப்.எஸ்.எம், 2013,*சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*, சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.
3. குணதாச பெரேரா, 1995, *மலையகத்தின் கலாசாரம்*, கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் வெளியீடு.
4. குணராசா.க, 1995,*சுற்றாற் புவியியல்*, கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
5. சாரல் நாடன், 2003,*மலையகத் தமிழர் வரலாறு*, சாரல் வெளியீட்டகம் கொட்டகலை.
6. Haralambos.M, and Heald. R.M, 1980, *Sociology; Themes and Perspectives*, Oxford University Press, New York.
7. Lynn M. Highland and Peter Bobrowsky, 2008, *The Landslide Handbook— A Guide to Understanding Landslides*, U.S. Geological Survey, Reston, Virginia.
8. http://www.dailymirror.lk/71637/construction-of-75-houses-for-meeriyabadde-landslide-victims-commences,10/12/2015:02.56 PM.
9. http://www.dailymirror.lk/71637,29/12/2015- 11.25 AM.
10. httpwww.dcee.ruh.ac.lkimagesdonaimageSimposumphotoes2015AbstractsRAIN_INDUCED_SLOPE_FAILURES_IN_UNSATURATED_SOIL_CASE_STUDY_OF_MEERIYABEDDA_LANDSLIDE.pdf, 06/03/2016:10.50 PM.
11. http://www.desinventar.lk/des_html/disaster_profile/landslide.pdf, 12/01/2016:12.44 AM.
12. http://www.ft.lk/article/537726/New-homes-for-75-families-in-Meeriyabedda ,09/04/2016- 09.30 PM.
13. http://newsfirst.lk/english/2014/10/president-expresses-condolences-victims-koslanda-tragedy/60515, 29/12/2015:08.00 PM.
14. http://www.searo.who.int/srilanka/documents/landslide-in-badulla, 29/12/2015-